# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம்
## விரிவாக்கக் கல்வி இயக்ககம், சென்னை
## ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல் - 637 002

இதழ் 2 | **செய்தி மடல்** | எண் : 4

**அக்டோபர் - டிசம்பர் 2017**



### முதன்மை ஆசிரியர்

முனைவர் **நி.கு. சுதீப்குமார்**
இயக்குநர்,
விரிவாக்கக் கல்வி இயக்ககம்

### ஆசிரியர்

முனைவர் **ந. அகிலா**
முதுநிலை விஞ்ஞானி
பேராசிரியர் மற்றும் தலைவர்

### இணை ஆசிரியர்

முனைவர் **சு. சத்யா**
விஞ்ஞானி / உதவிப் பேராசிரியர்
மண்ணியல் மற்றும்
வேளாண் வேதியியல்

### ஆசிரியர் குழு

முனைவர் **சி. ஷர்மிளா பாரதி**

முனைவர் **பெ. முருகன்**

திரு. **சி. சங்கர்**

மருத்துவர் **ம. ஜோதிலெட்சுமி**

முனைவர் **சி. பால்பாண்டி**

திருமதி. **மா. டெய்சி**




நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் விவசாயிகள், இளைஞர்கள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து வெளிவரும் புதிய தொழில்நுட்பங்களை வயல் வெளிச்சோதனை, முதல்நிலை செயல்விளக்கம், விழிப்புணர்வு முகாம் மற்றும் அறிவுரைகள் வழங்குதல் மூலம் கொண்டு சேர்ப்பத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. விவசாயிகள், பண்ணை மகளிர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர்களின் அறிவியல் சார்ந்த தொழில்நுட்பங்களின் பயன்பாட்டுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு வேளாண்மை அறிவியல் நிலையம் பல்வேறு வகையான பயிற்சிகள், விழிப்புணர்வு முகாம்கள், கண்காட்சிகள், செயல்விளக்கங்கள் மற்றும் வயல் விழாவினை நடத்தியது. அக்டோபர் முதல் டிசம்பர் 2017 வரை வேளாண்மை அறிவியல் நிலையம் செய்த முக்கிய பணிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

### 11-வது அறிவியல் ஆலோசனைக் குழுக்கூட்டம்

வேளாண்மை அறிவியல் நிலையத்தினுடைய 11-வது அறிவியல் ஆலோசனைக் குழுக்கூட்டம் 07.11.2017 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தை பல்கலைக்கழக துணை வேந்தர் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்தார். இக்கூட்டத்தில் ஹைதராபாத் வேளாண்மை தொழில்நுட்ப பயன்பாட்டு ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் ஒய்.ஜி.பிரசாத், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு.சுதீப்குமார் அவர்களுடன் திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி நிறுவனம், கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், நாமக்கல் மாவட்ட வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை, பொதுப்பணித்துறை (நீர்பாசனம்), பட்டு வளர்ச்சித்துறை, வேளாண் பொறியியல் துறை, மாவட்ட தொழில் மையம், மாவட்ட முன்னோடி வங்கி, தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, ஆவின் மற்றும் அகில இந்திய வானொலி நிலையத்தைச் சார்ந்த அதிகாரிகளும் மற்றும் சிறு பெரு விவசாயி பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கடந்த 2016-17-ம் ஆண்டில் நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தால் மேற்கொள்ளப்பட்ட முதல் நிலை மற்றும் வயல்வெளிச் சோதனையில் வெற்றி கண்ட தொழில்நுட்பங்களும், இயற்கை விவசாயம் சார்ந்த இடுபொருட்களும் கண்காட்சியில் 25 விவசாயிகளால் அமைக்கப்பட்டு இருந்தது. அறிவியல் ஆலோசனைக் குழுக்கூட்ட உறுப்பினர்கள் இக்கண்காட்சியைப் பார்வையிட்டனர். இக்கூட்டத்தை வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி முனைவர் ந.அகிலா அவர்கள் வரவேற்று 10-வது அறிவியல் ஆலோசனைக் குழுக்கூட்ட பரிந்துரைக்கேற்ப மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும், கடந்த ஆண்டில் செய்பணி விபரங்கள் பற்றியும் மற்றும் அடுத்த ஆண்டிற்கான செயல் திட்டங்கள் குறித்தும் எடுத்துரைத்தார். மேலும்

இக்கூட்டத்தில் இந்நிலைய விஞ்ஞானிகள் கடந்த ஆண்டின் செய்பணி விபரங்கள் குறித்து எடுத்துரைத்தனர். பல்கலைக்கழக துணைவேந்தரும் மற்றும் இதர குழு உறுப்பினர்களும் வேளாண்மை நிலையத்தின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான பரிந்துரைகளை கூட்ட முடிவில் எடுத்துரைத்தார்கள்.

**உலக மண்வளதினம் 2017 குறித்த ஒருநாள் கருத்தரங்கு மற்றும் கண்காட்சி**



உலக மண்வள தினம் 2017, டிசம்பர் 5-ம் தேதி நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடத்தப்பட்டது. இவ்விழாவில் 752 விவசாயிகளும் மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டனர். இவ்விழாவில் மண்வள மேம்பாடு குறித்த கண்காட்சியும் அமைக்கப்பட்டிருந்தது. வேளாண்மை அறிவியல் நிலையம் இக்கண்காட்சியில் 9 அரங்கமும், தனியார் உரக் கம்பெனிகள் 2 அரங்கமும் அமைத்திருந்தது. இயற்கை எருக்கள், இரசாயன உரங்கள், உயிர் உரங்கள், பூசா எஸ்.டி.எப்.ஆர் மற்றும் மிரிதபரிக்ஷா மண் பரிசோதனை உபகரணம் ஆகியவற்றை வேளாண்மை அறிவியல் நிலையம் இக்கண்காட்சியில் வைத்திருந்தது. இரசாயன உரங்களை கிரிப்கோ மற்றும் இப்கோ தனியார் உர நிறுவனம் வைத்திருந்தது. வேளாண்மை துறை சார்பில் நடமாடும் மண் பரிசோதனை ஊர்தி கண்காட்சியில் விவசாயிகளின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது. இவ்விழாவில் நாமக்கல் கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரி நிர்வாக முதல்வர் முனைவர் ஜீ.ஏ.பாலசுப்ரமணியம் அவர்கள் துவக்கி வைத்து விழா தலைமையுரையாற்றினார்கள். மண்வள தினம் அனுசரிக்கப்படுவதை பற்றியும் மற்றும் மண் பரிசோதனை அடிப்படையில் உரமிட வேண்டும் என்று விழிப்புணர்வையும் மக்களிடையே ஏற்படுத்தும் வண்ணம் உரையாற்றினார்கள். நாமக்கல் பி.ஜி.பி. வேளாண்மை கல்லூரி முதல்வர் முனைவர் கே.பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு மண்வள அட்டை வழங்கி மண்வள மேம்பாடு குறித்த சிறப்புரை ஆற்றினார்கள். வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ந.அகிலா அவர்கள் வரவேற்புரை ஆற்றி உலக மண்வள தினம் அனுசரிப்பதின் அவசியத்தை எடுத்துரைத்தார். வேளாண்மைத்துறை இணை இயக்குநர் (பொறுப்பு) திரு. எம்.சுப்பையா, நாமக்கல் மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (வேளாண்மைத்துறை) திரு.ஆர்.சுப்ரமணியம், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் திரு.எம்.ஜெயமணி, உதவி செயற்பொறியாளர் திரு.எஸ்.ஜெகநாதன், கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் மருத்துவர் வி.பழனிவேல், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் திருமதி.எஸ்.மணிமேகலை, தூத்துக்குடி, கிரிப்கோ தனியார் உர நிறுவன மண்டல மேலாளர் திரு.கே.ஜெகநாதன் ஏனைய அலுவலர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரையாற்றினார்கள்.

ஏத்தாப்பூர் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிறுவன உழவியல் துறை பேராசிரியர் முனைவர் து.இராஜா அவர்கள் மண்வள மேம்பாடு மற்றும் மண்வள மேம்பாட்டில் இயற்கை எருக்களின் பங்கு என்ற தலைப்பிலும் மற்றும் நாமக்கல் மாவட்ட வேளாண்மைத்துறை உதவி இயக்குநர் திரு.எல்.மாயக்கிருஷ்ணன் அவர்கள் மண்வள மேம்பாடு குறித்த தலைப்பிலும் தொழில்நுட்ப உரை ஆற்றினார்கள். புதுடெல்லி அகில இந்திய வானொலி நிலையத்தில் பாரத பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் மண்வள அட்டை திட்டம் பற்றிய கருத்துக்கள் அடங்கிய துண்டு பிரசுரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மண்வள அட்டை திட்டம், சாதனை குறித்த விளம்பர பலகை (16 x 8 அடியுள்ள) வேளாண்மை அறிவியல் நிலைய நுழைவு வாயிலின் முன்பு இரும்பு பலகையில் பொதுமக்கள், இதர விவசாயிகள் மற்றும் மாணவர்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப்பேராசிரியர் (மண்ணியல்) முனைவர் சு.சத்யா அவர்கள் நன்றியுரை வழங்கி தேசிய கீதம் ஒலிக்கப்பெற்று விழா முடிவடைந்தது.


**பயிர் இரகங்கள் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் உரிமை சட்டம் 2001 குறித்த ஒருநாள் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு முகாம்**



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் பயிர் இரகங்கள் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் உரிமைச் சட்டம் 2001 குறித்த ஒருநாள் விழிப்புணர்வு முகாம் மற்றும் கண்காட்சியை 30.11.2017 அன்று கொல்லிமலையிலுள்ள செம்மேட்டில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்ட அரங்கில் நடத்தியது. இவ்விழாவில் 113 விவசாயிகள் கலந்து கொண்டனர். பாரம்பரியம் வாய்ந்த மற்றும் கொல்லிமலையை அமைவிடமாக கொண்ட நமரன் மழை வாழை, கருமை மற்றும் வெள்ளை நிறம் கொண்ட மொச்சை வகைகள், மிளகு, இலவங்கம், சாதிக்காய்,

பட்டை, சிறுதானியங்கள் மற்றும் பழவகைகள் கண்காட்சியில் விவசாயிகளால் வைக்கப்பட்டிருந்தது. இக்கண்காட்சியில் சிறுதானியங்களில் மதிப்பூக்கூட்டிய பொருட்களை ஆரைக்கால் சிறுதானிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனமும், பாரம்பரியமிக்க சிறுதானியம் மற்றும் வாசனைப்பயிர்களின் விதைகளை மா.செ.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையும் மற்றும் கொல்லிமலை சிறப்பு வாய்ந்த வாசனைப்பயிர்களை தோட்டக்கலைத்துறையும் வைத்திருந்தது. இவ்விழாவினை நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் அவர்கள் துவக்கி வைத்து விவசாயிகளிடைய சிறப்புரையாற்றினார். மேலும் இந்நிகழ்ச்சியில் கொல்லிமலை வேளாண்மைத்துறை உதவி இயக்குநர் திரு.எஸ்.சௌந்தரராஜன் அவர்களும், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் (பொறுப்பு) திரு.பி.சின்னதுரை அவர்களும், வேளாண்மை அலுவலர் திரு.டி.கௌதமன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புறையாற்றினார்கள். சந்தியூர் வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் (விதையியல்) முனைவர் இரா.விஜயன் விழாவில் கலந்து கொண்டு பயிர் இரகங்கள் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் உரிமை சட்டம் 2001 குறித்தும் மற்றும் கொல்லிமலை மா.செ.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை விஞ்ஞானி திரு.கே.ஞானபிரகாசம் பாரம்பரிய இரகங்களின் காப்புரிமை பற்றிய தொழில்நுட்ப உரைகளை வழங்கினார்கள். வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு கண்காட்சி அமைத்த விவசாயிகளை கௌரவித்தார். கொல்லிமலையை சேர்ந்த நமரன் வாழை மற்றும மனோரஞ்சிதம் (கருவாழை) ஆகிய இரண்டு இரகங்களும் பழைமைவாய்ந்ததாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. முனைவர் சி.ஷர்மிளா பாரதி, உதவிப்பேராசிரியர் (தோட்டக்கலை) நன்றியுரை வழங்கியவுடன் தேசிய கீதம் ஒலிக்கப்பெற்று விழா முடிவடைந்தது.

**வருடம் ஒரு கன்று - கறவைமாடுகளில் கருத்தங்காமை பிரச்சனைகளுக்கு தொழில்நுட்ப மேலாண்மை உத்திகள் குறித்த கண்காட்சி மற்றும் கருத்தரங்கு**



வேளாண்மை அறிவியல் நிலையம் ஒருநாள் விழாவாக வருடம் ஒரு கன்று - கறவை மாடுகளில் கருத்தங்காமை பிரச்சனைகளுக்கான தொழில்நுட்ப மேலாண்மை உத்திகள் என்ற தலைப்பில் கருத்தரங்கு மற்றும் கண்காட்சியினை 15.12.2017 அன்று பாவலர் மா.முத்துசாமி நகராட்சி மண்டபத்தில் நடத்தியது. இவ்விழாவில் 500 கறவை மாடு வைத்திருக்கும் விவசாயிகளும் மற்றும் 34 களப்பணியாளர்களும் கலந்து கொண்டனர். இவ்விழாவில் நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம், தனியார் நிறுவனங்கள், வேளாண் புதுமை மற்றும் விவசாய தொழில் முனைவோர் ஆகியோர்கள் கலந்து கொண்டு கண்காட்சி அமைத்திருந்தனர். கருத்தங்காமை பிரச்சனைகளுக்கான தீர்வுகளும், தாது உப்புக்கலவை, அசோலா, ஹைட்ரோபோனிக்ஸ், தூய பால் உற்பத்தி தொழில்நுட்பங்கள், தீவன விதைகள், கரணைகள், கால்நடை பாதுகாப்பு சம்பந்தமான பொருட்கள், வேலை பளுவை குறைக்கும் வேளாண் உபகரணங்கள் மற்றும் மதிப்பூட்டிய பால் பொருட்கள் வைக்கப்பட்டிருந்தது. இவ்விழாவை நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி எம்.ஆசியா மரியம் அவர்கள் கண்காட்சியை துவக்கி வைத்து விழா சிறப்புரையாற்றினார்கள். விவசாயிகள் கறவைமாடுகளில் வருடம் ஒரு கன்று பெற அறிவியல் சார்ந்த தொழில்நுட்பங்களை கடைபிடிக்க வேண்டுமாறு கேட்டுக்கொண்டார். விவசாயிகள் புதிய கறவை மாடு வளர்க்கும் தொழில்நுட்பங்களை கடைபிடிக்கும் வகையில் தூய பால் உற்பத்திக்கான உபகரணங்கள் மற்றும் தாது உப்புக்கலவை அடங்கிய தொகுப்பை வழங்கினார். நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத் தலைவர் முனைவர் ந.அகிலா அவர்கள் விழாவை தலைமையேற்று வரவேற்புரை நல்கி விழாவின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். நாமக்கல் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மருத்துவர் எம். சீனிவாசன், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (வேளாண்மைத்துறை) திரு.ஆர்.சுப்ரமணியன், கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் மருத்துவர் வி.பழனிவேல், நாமக்கல் முன்னாள் நகர்மன்ற தலைவர் திரு.ஆர்.கரிகாலன் ஆகியோர்கள் விழாவில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். டேராடூனிலுள்ள தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளையின் முதுநிலை கண்டுபிடிப்பு விஞ்ஞானி முனைவர் ஆர்.இரவிக்குமார் அவர்கள் நீடித்த இலாபகரமான கறவைமாடு வளர்ப்பிற்கான பாரம்பரிய மருத்துவ முறைகள் பற்றியும், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய உதவிப்பேராசிரியர் முனைவர் கி.செந்தில்குமார் வருடம் ஒரு கன்று பெருவதற்கான நவீன தொழில்நுட்பங்கள் பற்றியும் தொழில்நுட்ப உரைகள் வழங்கினார்கள். மடிவீக்க நோய் கண்டுபிடிக்கும் முறைகள் பற்றிய செயல் விளக்கமும், கறவை மாடு வளர்ப்பு பற்றிய படக்காட்சியும் காண்பிக்கப்பட்டு கறவைமாடுகளில் தீவன மற்றும் இனப்பெருக்க மேலாண்மை அடங்கிய கையேடும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. முடிவாக நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப்பேராசிரியர்

மருத்துவர் ம.ஜோதிலெட்சுமி நன்றியுரை வழங்கி தேசிய கீதம் ஒலிக்கப்பெற்று விழா நிறைவடைந்தது.

### பாதுகாப்பான முறையில் பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு முகாம்



பாதுகாப்பான முறையில் பூச்சி, பூஞ்சாணம் மற்றும் களைக்கொல்லிகளை பயன்படுத்துதல் குறித்த கருத்தரங்கு மற்றும் கண்காட்சி 11.12.17 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடத்தப்பட்டது. இவ்விழாவில் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் அவர்கள் வரவேற்புரை நல்கி விழாவை துவக்கி வைத்தார். திருச்சி மத்திய ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மைய உதவி இயக்குநர் முனைவர் எஸ்.ஞானசம்பந்தம், தோட்டக்கலை இணை இயக்குநர், திரு.எஸ்.கண்ணன், பட்டுவளர்ச்சித்துறை உதவி இயக்குநர் திரு.ப.முருகன் மற்றும் வேளாண்மைத்துறை உதவி இயக்குநர் திரு.எல்.மாயகிருஷ்ணன் ஆகியோர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரையாற்றினார்கள். நாமக்கல் பி.ஜி.பி. வேளாண்மை அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் கே.பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டு விழா சிறப்புரையாற்றினார்கள். இவ்விழாவை நாமக்கல் மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குநர் (பொறுப்பு) திரு.எம்.சுப்பையா அவர்கள் கலந்து கொண்டு விழா தலைமையுரையாற்றினார்கள். ஏத்தாப்பூர் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய உழவியல் துறை பேராசிரியர் முனைவர் து.ராஜா களைக்கொல்லிகளை பயன்படுத்தும் முறைகள் பற்றியும், நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய பூச்சியியல்துறை உதவிப்பேராசிரியர் திரு.சி.சங்கர் பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தும் முறைகள் பற்றிய தொழில்நுட்ப உரை வழங்கினார்கள். இத்துடன் நாமக்கல் மாவட்ட பேயர் கிராப் சயின்ஸ் விற்பனை மேலாளர் திரு.கு.அறிவுச்செல்வன், பெரம்பலூர், பி.ஏ.எஸ்.எப். இந்தியா லிமிடெட் நிறுவனத்தை சார்ந்த திரு.சு.யுதிசெரன், கோயம்புத்தூர், டவ் அக்ரோ சயின்ஸ் லிமிடெட் நிறுவனத்தை சார்ந்த திரு.கே.ரமேஷ் மற்றும் நாமக்கல் மாவட்ட ரிலையன்ஸ் அறக்கட்டளை திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.எம்.காளிமுத்து ஆகியோர்கள் விவசாயிகளிடையே பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளிக்கும் போது கவனிக்க வேண்டிய விதிமுறைகள், அணியவேண்டிய உபகரணங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள். முடிவாக இவ்விழாவானது உதவிப்பேராசிரியர் திரு.சி.சங்கர் அவர்கள் நன்றியுரை வழங்க முடிவடைந்தது.

### தனுவாஸ் கிராம தத்தெடுப்புத் திட்டம்

### கன்று ஈனும் தினம்



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் பல்கலைக்கழக கிராம தத்தெடுப்புத்திட்டத்தின் கீழ் கன்று ஈனும் தினத்தை 23.10.2017 அன்று களங்கானியிலுள்ள கால்நடை பராமரிப்பு நிலையத்தில் நடத்தியது. ட்ரையூப் / யோனி குழாய் பஞ்சு பயன்படுத்தி சினைப்பிடித்தல் அதிகரித்தல் என்ற நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய வயல்வெளி தொழில்நுட்பத்தின் மூலம் ஈனப்பட்ட கன்றுகளை அங்கீகரிக்கும் வண்ணம் கொண்டாடப்பட்டது. ட்ரையூப் மூலம் 90 சதவீத சினைப்பிடிப்பும், யோனிக் குழாய் பஞ்சு தொழில்நுட்பத்தின் மூலம் 80 சதவீத சினைப்பிடிப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளது. வயல்வெளி பரிசோதனையின் மூலம் ஈனப்பட்ட கன்றுகளுக்கு கருத்தங்காமை ஏற்படாமல் இருக்க கோ.எப்.எஸ் 29 தீவன விதையும், குடற்புழு நீக்கத்திற்கு மருந்துகளும் அளிக்கப்பட்டது. அப்பொழுது மடிவீக்க நோய் கண்டறியும் முறை பற்றிய செயல் விளக்கமும் காண்பிக்கப்பட்டது. மொத்தம் 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். மேலும் இவ்விழாவில் கால்நடை பராமரிப்பு துறை துணை இயக்குநர் மருத்துவர் பி.இராஜமனோகர், நாமக்கல் வேளாண்மை நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ந.அகிலா, நாமக்கல் வேளாண்மை நிலையம் உழவியல்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் பெ.முருகன், கால்நடை அறிவியல் உதவிப்பேராசிரியர் மருத்துவர் எம்.ஜோதிலெட்சுமி மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை உதவி மருத்துவர் சுமதி ஆகியோர் பங்கு பெற்றுள்ளனர்.

### பொருளாதார மேம்பாடு குறித்த விழிப்புணர்வு



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் அணியாபுரத்தில் அமைந்துள்ள பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் 14.11.17 அன்று பள்ளிக் குழந்தைகளிடையே பொருளாதார மேம்பாடு குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தியது. சேமிப்புப் பற்றிய கட்டுரை, பேச்சுப்போட்டிகளை நடத்தி சிறந்த 3 மாணவர்களுக்கு சேமிப்பை ஊக்குவிக்கும் வண்ணம் உண்டியலை பரிசாக வழங்கியது. இவ்விழாவில் நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர்

அவர்கள் பரிசளித்தார் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை உதவிப்பேராசிரியர் உடனிருந்தார்

## தேசிய பால் தினம்



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் தேசிய பால் தினமான 26.11.2017 அன்று தூய பால் உற்பத்தி பற்றிய நிகழ்ச்சியினை களங்கானியிலுள்ள பால்உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் நடத்தியது. 20 விவசாயிகள் கலந்து கொண்டனர். தூய பால் உற்பத்திக்கான மடி கழுவும் கருவி, புதிய தொழில்நுட்பங்களை பற்றிய செயல்விளக்கமும் செய்து காண்பிக்கப்பட்டது. கால்நடை பராமரிப்புத்துறை உதவிப்பேராசிரியர் மருத்துவர் எம்.ஜோதிலெட்சுமி, களங்கானி கால்நடை பராமரிப்புத்துறை உதவி மருத்துவர் சுமதி ஆகியோர் தூய பால் உற்பத்தி பற்றிய தொழில்நுட்பங்களை எடுத்துரைத்து பொட்டாசியம் பெர்மாங்கனேட், மடி கழுவும் திரவம் ஆகியவற்றை விவசாயிகளுக்கு வழங்கினார்கள்.

## தேசிய உழவர் தினம்



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் தேசிய உழவர் தினத்தை 29.12.2017 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்தில் கொண்டாடியது. இவ்விழாவில் வேளாண்மை அறிவியல் நிலையத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு தேசிய அளவிலான உணவு தானியங்கள் உற்பத்தி மற்றும் இதர வேளாண் சார்ந்த துறையில் விவசாயிகள் காட்டும் ஆர்வத்தை பற்றி எடுத்துரைத்தார். விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் கால்நடை வளர்ப்பு பற்றிய தொழில்நுட்பங்களை வேளாண்மை அறிவியல் நிலைய கால்நடை அறிவியல் உதப்பேராசிரியர் விவசாயிகளுக்கும் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவி மருத்துவரும் எடுத்துரைத்தார்கள்.

## சிறப்பு நிகழ்ச்சிகள்





| நாள் | நிகழ்வுகள் | இடம் | எண்ணிக்-கை |
|---|---|---|---|
| 16.10.17 | விவசாய பெண்மணிகளை கௌரவித்தல் | அணியாபுரம் புதூர் | 27 |
| 31.10.17 - 04.11.17 | ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம் | கே.வீ.கே நாமக்கல் | 30 |
| 21.11.17 | உலக மீனவர்கள் தினம் | கே.வீ.கே நாமக்கல் | 53 |
| 27.11.17 | அரசியலமைப்பு சட்ட நிறுவன நாள் | கே.வீ.கே நாமக்கல் | 30 |

## வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு சிறப்பு விருந்தினர்கள் வருகை

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணை வேந்தர் மருத்துவர் எஸ்.திலகர் மற்றும் ஹைதராபாத் வேளாண்மை தொழில்நுடப பயன்பாட்டு ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் ஒய்.ஜி.பிரசாத் அவர்கள் 07.11.17 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு வருகை புரிந்து வேளாண்மை அறிவியல் நிலைய வளர்ச்சி குறித்தும் மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் பற்றியும் பரிந்துரைகள் வழங்கினார்கள்.



ஹைதராபாத் கிரைடா நிறுவனத்தின் பேராசிரியர்கள் முனைவர் ஜே.வி.என்.எஸ். பிரசாத் மற்றும் சி.ஏ. ரமணராவ் ஆகியோர்கள் கடந்த 3.11.2017 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு வருகை புரிந்தனர். அன்றிலிருந்து 5.11.2017 வரை நாமக்கல்லில் தங்கியிருந்து வேளாண்மை அறிவியல் நிலையம் நிக்ரா திட்ட கிராமமான வடவத்தூர் மற்றும் ஜம்புமடை கிராமங்களில் தேசிய அளவிலான வெப்பநிலை மாற்றத்திற்கேற்ற தொழில்நுட்பங்களின் தாக்கம் பற்றி விவசாயிகளிடம் கேட்டறிந்தனர்.

## உள்ளிடப்பயிற்சிகள்



கடந்த அக்டோபர் முதல் டிசம்பர் 2017 வரை 19 உள்ளிடப்பயிற்சிகளை நாமக்கல் வேளாண்மை

அறிவியல் நிலையம் நடத்தியது. அதில் 655 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். எண்ணெய் வித்துப்பயிர்கள், மரவள்ளி, சின்ன வெங்காயப் பயிர்களின் உற்பத்தி, மண்வள மேம்பாடு, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம், பட்டுப்புழு வளர்ப்பு, வேளாண் கருவிகள், மாவுப்பூச்சிக்கேற்ற ஒட்டுண்ணி தயாரிப்பு, பூச்சி மேலாண்மை, வெண்பன்றி வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, கறவைமாடுகளில் இனப்பெருக்கத்தினை அதிகரிக்கும் வழிமுறைகள், இறால் மற்றும் திலேபியா வளர்ப்பு முறைகள் அடங்கிய தலைப்புகளில் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

### இதர துறைகளுடன் வேளாண்மை அறிவியல் நிலையம் இணைந்து மேற்கொண்ட பயிற்சிகள்



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் கால்நடை பராமரிப்பு துறைகளுடன் இணைந்து 23 வெளியிடப் பயிற்சிகளை மேற்கொண்டது. காளான் வளர்ப்பு, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு ஆகிய தலைப்புகளில் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. மொத்தமாக 1224 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். மேற்கொள்ளப்பட்ட 23 பயிற்சிகளில் 21 பயிற்சிகளில் 1170 பயனாளிகளைக் கொண்டு விலையில்லா செம்மறியாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பிற்காக நடத்தப்பட்டது. விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு, விவசாயத்துடன் இதர இலாபகரமான தொழிலான வெள்ளாடு வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் விலையில்லா வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பிற்கான பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

### நிதியுதவியுடன் கூடிய பயிற்சிகள்



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் இரண்டு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை 60 விவசாயிகளுக்கு நடத்தியது. இயற்கை முறையில் வீட்டு மாடிக் காய்கறித் தோட்டம் என்ற தலைப்பில் 12.12.2017 முதல் 14.12.2017 வரையிலும் மற்றும் தோட்டக்கலைப் பயிற்களில் நாற்றங்கால் மேலாண்மை என்ற தலைப்பில் 19.12.2017 முதல் 21.12.2017 வரையிலும் பயிற்சியை நடத்தியது. இப்பயிற்சிகளில் குழித்தட்டு முறையில் நாற்றுகள் உற்பத்தி செய்தல், மாடிக் காய்கறித் தோட்டம், ஒட்டுக்கட்டுதல் போன்றவற்றில் பயிற்சிகள் அளிக்கப்பட்டது. கண்டுநர் சுற்றுலாவிற்கு ஈரோடு உயிர் இயற்கை பண்ணைக்கும், கார்கூடல்பட்டியிலுள்ள குழித்தட்டு முறையில் நாற்றங்கால் உற்பத்தி அமைப்பிற்கும், கருமந்துறையிலுள்ள ஜெயிண்ட் பழப்பண்ணைக்கும், ராசிபுரத்திலுள்ள தனியார் துறை நாற்றங்கால் பண்ணைக்கும் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலைய விவசாயிகளால் தங்களது மாடியில் அமைக்கப்பட்டுள்ள மாடி காய்கறித் தோட்டத்தையும் பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டனர்.

### கட்டணப் பயிற்சிகள்




நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் 18.12.2017 அன்று கட்டணப் பயிற்சியாக நன்னீர் மற்றும் உவர்நீரில் மீன் வளர்ப்பு என்ற தலைப்பில் 23 மானவர்களுக்கு பயிற்சியளித்தது. மீன் வளர்க்க உகந்த இடங்களை தேர்வு செய்தல், மீன் இரகங்கள் மற்றும் வகைகள், உணவு மேலாண்மை, நீர்வளம், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, மதிப்பூட்டிய மீன் பொருட்கள் தயாரித்தல் ஆகிய தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டது.

### வெளியிடப் பயிற்சிகள்



கால சூழ்நிலைகள் மற்றும் விவசாயிகளின் தேவைக்கேற்ப 17 வெளியிடப் பயிற்சிகளை விவசாய நிலங்களில் 507 விவசாயிகளைக் கொண்டு நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் நடத்தியது. வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறையிலுள்ள முக்கியப் பிரச்சனைகள் மற்றும் தீர்வுகள் குறித்தும் பயிற்சிகள் அளிக்கப்பட்டது.

### மண்டல மாதாந்திர பணிமனைக் கூட்டம்



கடந்த மூன்று மாதங்களில் இரண்டு மண்டல மாதாந்திர பணிமனைக் கூட்டத்தை வேளாண்மை அறிவியல் நிலைய

வளாகத்தில் 10.10.17 மற்றும் 14.11.17-ல் நடத்தியது. இதில் 65 வேளாண்மை துறையை சார்ந்த களப்பணியாளர்கள் கலந்து கொண்டனர். வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் பருவநிலைகேற்ற சாகுபடி குறிப்புகள் பற்றிய தொழில்நுட்ப உரை வழங்கினார்கள். இக்கூட்டத்தில் பல்வேறு வட்டாரங்களில் உள்ள பிரச்சனைகள் குறித்தும் அதற்கேற்ற தீர்வுகளும் விவாதிக்கப்பட்டது.

**கண்காட்சி அமைத்தல் / கலந்து கொள்ளுதல்**

வேளாண்மை அறிவியல் நிலையம் நிலையத்தினுடைய கருத்தரங்கு மற்றும் விழிப்புணர்வு முகாம்களில் கண்காட்சி அமைத்திருந்தது. இக்கண்காட்சியில் 1630 விவசாயிகள் கலந்து கொண்டு பார்வையிட்டனர். மண்வள மேம்பாட்டினை மேம்படுத்தும் இடுபொருட்கள், மண் பரிசோதனை கருவிகள் (பூசா எஸ்.டி.எப்.ஆர். மற்றும் மிருதபரிக்ஷா), அதிக மகசூல் தரும் பயிர் இரகங்கள், தீவன விதைகள், இயற்கை இடுபொருட்கள், காய்கறி பயிர்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது. ம.செ. சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை பாரம்பரியமிக்க விதைகளையும், இப்கோ மற்றும் கிரிப்கோ உரக்கம்பெனிகள் இரசாயன உரங்களையும், இண்டர்வெட், பாலிக்கம், அமுல், ஹிந்துஸ்தான் ஆகியன கால்நடை பராமரிப்பு சம்பந்தமான மருந்துகளையும், வேளாண் புதுமை பண்ணைகளில் வேளாண் பழுவைக் குறைக்கும் இயந்திரங்களையும், சிய்யாளம்மன் இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பு அமைப்பு வேளாண் கழிவுகளைக் கொண்டு தயாரிக்கும் இடுபொருட்களையும், நாமக்கல் ஆரைக்கல் சிறுதானிய உழவர் உற்பத்தியாளர் குழு, சிறுதானியங்களில் மதிப்புக்கூட்டிய பொருட்களையும், வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரிப்புத்துறை, நாமக்கல் கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரி, துறையில் உள்ள முக்கிய திட்டங்களையும், நடமாடும் மண் பரிசோதனை வாகனத்தையும், கன்றுகளில் பல்வேறு பரினாம நிலையையும் மற்றும் மாடிகாய்கறி தோட்டத்திற்கு தேவையான இடுப்பொருட்களையும் கண்காட்சியில் வைத்திருந்தது.



**மண் மற்றும் நீர் பரிசோதனை மற்றும் மண்வள அட்டை வழங்குதல்**

நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் கடந்த அக்டோபர் முதல் டிசம்பர் 2017 வரை 160 மண் மற்றும் 29 பாசன நீர் மாதிரிகளையும் விவசாயிகளிடமிருந்து பெற்று பரிசோதனை செய்து 172 மண்வள மற்றும் 29 பாசன நீர் வள அட்டைகளையும் வழங்கியது. மண்வள மற்றும் பாசன நீர்வள அட்டை அடிப்படையில் மண்வளத்தை மேம்படுத்தும் பொருட்டு மண்வள மேம்பாடு குறித்த அறிவுரைகளும் வழங்கப்பட்டது.



**விவசாயிகளை கௌரவித்தல்**

வேளாண்மை அறிவியல் நிலையத்தின் விவசாயிகளான திரு.கே.செங்கோட்டையன், சேவாகவுண்டன்பாளையம், திரு.வி.ராசு, கூலிப்பட்டி, திரு.சி.பெரியசாமி, மானுவகாட்டுப்பாளையம் ஆகிய மூவரும் சிறந்த விவசாயிகளுக்கான விருதினை அறிவியல் நிலையத்தினுடைய பதினோறாவது அறிவியல் ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் பெற்றனர்கள். இத்துடன் திரு.கே.செங்கோட்டையன், சேவாகவுண்டன்பாளையம், திரு.ஆர்.வேலப்பக்கவுண்டர், காளப்பநாயக்கன்பட்டி, ஆகிய இருவரும் ஒருங்கிணைந்த பண்ணையத்திற்காகவும் மற்றும் திரு.வி.ராசு, கூலிப்பட்டி, அவர்கள் வெள்ளாடு வளர்ப்பிற்காகவும் பல்கலைக்கழக நிறுவன நாள் விழா திண்டுக்கல் வேலு மஹாலில் நடைபெற்ற போது சிறந்த விவசாயிகளுக்கான விருதினை பெற்றனர்.



**கண்டுநர் சுற்றுலா - பட்டறிவு பயணம்**

நாமக்கல் மாவட்டத்தின் பல்வேறு வட்டாரங்களிலிருந்து 660 மாணவர்களும், பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து 85 விவசாயிகளும், கர்நாடகா மாநிலத்தின் பெல்லாரி மாவட்டத்திலிருந்து அட்மா திட்ட கண்டுநர் சுற்றுலா மூலம் 28 விவசாயிகளும் கடந்த அக்டோபர் முதல் டிசம்பர் 2017 வரை வேளாண்மை அறிவியல் நிலையத்தை பார்வையிட்டனர். மொத்தமாக 773 மாணவர்களுக்கும் மற்றும் விவசாயிகளுக்கும் வேளாண்மை அறிவியல் நிலையம் பற்றிய கருத்துக்களும் மாதிரி திடல்கள் பற்றிய கருத்துக்களும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.



**வெற்றிக்கதை**

| | | |
|---|---|---|
| 1. | விவசாயின் பெயர் மற்றும் முகவரி |  திரு. **கே.கே. வேலுசாமி** த/பெ. **எஸ். கந்தசாமி**<br>பாலப்பட்டி, பரமத்தி வேலூர் தாலுக்கா,<br>நாமக்கல் மாவட்டம்.<br>அலைபேசி எண் : 94432 23707 |
| 2. | பண்ணை விபரம் | வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பெற்ற பயிற்சிக்கு பின்னர் நவம்பர் 2010 முதல் ஒருங்கிணைந்த பண்ணையத்தை கடைபிடித்து வருகிறார். |
| 3. | ஆண்டு வருமானம் | ஆண்டு நிகர வருமானம் ரூபாய் 13,62,200/- |
| 4. | கடைபிடித்து வரும் புதிய தொழில்நுட்பங்கள் | ❖ பருவமற்ற காலங்களில் காய்கறி சாகுபடி செய்தல், பந்தல் முறையில் சொட்டுநீர் பாசனம் கொண்டு காய்கறி சாகுபடி செய்தல்.<br>❖ காய்கறி சாகுபடியில் பூச்சி மேலாண்மைக்காக பழ ஈ பொறி வைத்தல். |
| 5. | செய்முறையில் உள்ள தொழில்நுட்பங்கள் | ❖ பந்தல் முறையில் காய்கறி சாகுபடி செய்தல்.<br>❖ பழ ஈ பொறி வைத்தல்.<br>❖ சொட்டுநீர் பாசனம் செய்தல்<br>❖ பருவமற்ற காலங்களில் காய்கறி சாகுபடி செய்தல்<br>❖ தரம் பார்த்து காய்கறிகளை பிரித்தல்.<br>❖ உழவர் சந்தையில் காய்கறியை தினமும் விற்பனை செய்தல். |
| 6. | நோய் மேலாண்மைக்காக கடைபிடிக்கும் தொழில்நுட்பங்கள் | உயிரியல் முறையில் பூச்சிக்கொல்லி மற்றும் பூஞ்சாணக்கொல்லி மருந்துகளை வைத்து பண்ணையிலுள்ள காய்கறி செடிகளுக்கு பூச்சி மற்றும் நோய் மேலாண்மையை கடைபிடித்து வருகிறார். |
| 7. | வேலைவாய்ப்பு அளித்தல் | பண்ணையில் 6 வேலையாட்கள் தொடந்து வருடம் முழுவதும் வேலை செய்தல் ( 1 குடும்ப நபர், 5 வேலையாட்கள்) |
| 8. | மற்ற நிறுவனங்களுடான தொடர்பு | ❖ வேளாண்மை வணிகம் – உழவர் சந்தையில் காய்கறி விற்பனைக்காக<br>❖ தோட்டக்கலைத்துறை – பந்தல் அமைத்ததற்காக<br>❖ தென்னை வாரியம், கொச்சின் – தென்னை கொப்பரையின் விலையை அறிவதற்காக<br>❖ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை. |
| 9. | பொருளாதார நிலை | வருடத்திற்கு நிகர இலாபமாக ரூ. 13,62,200 பெருகிறார். |


**மேலும் தகவலுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

முதுநிலை விஞ்ஞானி
பேராசிரியர் மற்றும் தலைவர்
**ICAR** – வேளாண்மை அறிவியல் நிலையம்
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும்
ஆராய்ச்சி நிலைய வளாகம்
நாமக்கல் – 637 002


**ICAR** – வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல்.

பெறுநர்

திரு./ திருமதி. ______________________________

______________________________

அனுப்புநர் ______________________________

முதுநிலை விஞ்ஞானி, பேராசிரியர் மற்றும் தலைவர்
**ICAR** – வேளாண்மை அறிவியல் நிலையம்
நாமக்கல் – 637 002